**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (கு.உ.பா) தஞ்சாவூர்.**

முன்னிலை **திரு.கு.கருணாநிதி,** எம்.ஏ., எம்.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (கு.உ.பா) தஞ்சாவூர்

**2019** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ம் நாள் திங்கட்கிழமை
2050 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிகாரி வருடம் புரட்டாசி திங்கள் 13-ம் நாள்

**பட்டியல் வழக்கு எண் 01/2019**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக - காவல்துறை துணை கண்காணிப்பாளர், திருவாரூர் உட்கோட்டம் கூத்தாநல்லூர் காவல் நிலையம், குற்ற எண் 09/2018. |
| எதிரிகள் | : | பாண்டியராஜன், வயது 23/2018 த/பெ பாஸ்கர், ஜீவா தெரு, ஆதங்குடி |
| குற்றம் கூறப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii) -ன்கீழ் |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii) -ன்கீழ் |
| எதிரிகளின் கூற்று | : | குற்றவாளி இல்லை. பொய் வழக்கு |
| நீதிமன்றத்தின் முடிவு | : | **இறுதியாக, இ.த.ச பிரிவுகள் 294(பி), 324( 2 எண்ணிக்கை), 506(ii)-ன்கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் ஐயப்பாட்டின் பலன்களை எதிரிக்கு வழங்கி குவிமுச. பிரிவு 235(1) பிரிவின்படி விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிற்கான வழக்கு பொருள் எதுவும் இல்லை. விசாரணை காலத்தில் எதிரி** |

**பிணையில் இருந்தார். மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாதிருப்பின் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ள பிணை முறியை இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.**

இந்த சிறப்பு அமர்வு வழக்கில் அரசு தரப்பில் அறிவார்ந்த சிறப்பு அரசு வழக்கறிஞர் **திரு.ஜெ.அர்சுணன்** அவர்களும், எதிரி தரப்பில் அறிவார்ந்த வழக்கிறிஞர் திரு பி.சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், என் முன்பாக 30.09.2019-ஆம் நாள் இறுதி விசாரணைக்கு வந்து இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கலான :-

## தீர்ப்புரை

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் காவல் சரகத்திற்கு உள்ளடங்கிய பொதக்குடி பரக்கத் பாஸ்ட்புட் கடையில் 10.01.2018-ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் தலையில் இரத்த காயங்களுடன் வழக்கின் எதிரியாக பாண்டியராஜன் மற்றும் அவரது நண்பர் அஜய்குமார் பரக்கத் பாஸ்ட்புட் ஓனர் சலீம் பாட்ஷாவை தாக்க முற்பட்டபோது, மத்திசம் செய்த சாட்சி முகம்மது தௌபிக் என்பவரை எதிரி பாண்டியராஜன் 'குச்சிக்காரி, தேவடியா பயலே,' என்று கேவலமாக திட்ட தலையிலும், இடது தோள்பட்டையிலும் இரும்பு கம்பியால் அடித்து சாதாரண காயம் உண்டுபண்ணியும், 'கொல்லாமல் விடமாட்டேன்' என்று குற்றமுறு மிரட்டல் விடுத்து குற்றச்செயல் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii)-ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றச் செயல் புரிந்துள்ளதாகவும், திருவாரூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் எதிரி மீது புலனாய்வு மேற்கொண்டு தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில், இந்நீதிமன்றக் கோப்பில் பட்டியல் வழக்கு எண்.01/2018-ஆக ஏற்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207ஆவது பிரிவின்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அரசு வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கை

துவங்க, வழக்கு ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு முகநிலை ஆதரவு உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 324( 2 எண்ணிக்கை), 506(ii)-ன்கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து எதிரியிடம் அவர் மீதான குற்றச்செய்கைகளை பற்றி தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு எனவும், குற்றவாளி அல்ல எனவும் கூறியதால், விசாரணைக்கு நெறிப்படுத்தப்பட்டனர். அரசு தரப்பில் 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## 2. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாராம்சம்:-

10.1.2018ம் தேதி அ.சா.8 வெங்கடாசலம் கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற வான் செய்தி தகவலை பெற்று, திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த தௌபிக் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவுசெய்து, பின்பு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 8/2018 ச/பி 147, 148, 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை இணைத்து, மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2க்கு அனுப்பி, ஒரு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு சமர்ப்பித்து, மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க, காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன் முதல் தகவல் அறிக்கையினை பார்வையிட்டு, இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு 11.1.2018ம் தேதி சென்று, சம்பவ இடம் சென்று, அ.சா.6 முகமது ஜாகிர் உசேன், அ.சா.7 ஷேக் அலாவுதின் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரிவரைபடம் தயார் செய்து, பின்பு இவ்வழக்கின் புகார்தாரர் முகமது தௌபிக் சாட்சிகள் அப்துல் ரஜாக், ரியாசுதின், ராமு, முகமது ஜாகிர் உசேன், ஷேக் அலாவுதின் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் எதிரி பாண்டியராஜனை பொதக்குடி லெட்சுமாங்குடி வெண்ணாத்து பாலம் அருகில் வைத்து கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி, இவ்வழக்கானது எதிரிடை

வழக்காக இருப்பதால், இவ்வழக்கினை விசாரணை செய்யும் அதிகாரம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு மட்டுமே உள்ளதால், இவ்வழக்கு கோப்பினை காவல் துணை கண்காண்ப்பாளராக பணியிலிருந்த சுகுமார் என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, குற்ற எண் 9/2018 உடன் சேர்த்து இதனையும் புலன் விசாரணை செய்து, அவர் ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சொன்ன அதே விபரத்தை அவரிடமும் விசாரணையின் போது சொன்னதால், தனியாக மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யயாமல், அவர் மேற்படி சட்டபிரிவுகளை 294(பி), 324, 506(2) ஆக அ.சா.ஆ.6 சட்டபிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, பின்னர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால், அதற்கு பின் காவல் துணை கண்காணிபாளர் பணியில் சேர்ந்த அ.சா.8 காவல் துணை கண்காணிப்பாளர் நடராஜனிடம் ஒப்புவிக்கப்பட்ட வழக்கு கோப்பினை அவர் பெற்று சாட்சிகளை விசாரித்து, இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கபில்ராஜ் என்பவரை விசாரித்து, அவரிடமிருந்து அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் காயசான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் வெங்கடாசலம், முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் எதிரி பாண்டியராஜன் மட்டும் சம்மந்தப்பட்டுள்ளார் எனவும், புகாரில் கண்ட மற்ற எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை எனவும் அவரது விசாரணையில் தெரியவந்ததால், மற்ற எதிரிகளை நீக்கம் செய்து, பாண்டியராஜன் மீது மட்டும் மேற்படி சட்டபிரிவு மாற்று அறிக்கை பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு எதிராக காணப்படும் சாட்சியங்களை தொகுத்து குவிமுச பிரிவு கு.வி.மு.ச.313 (1 ) (ஆ)-ன்கீழ் விளக்கி வினவியபோது, எதிரிகள் அதனை பொய் சாட்சியம் எனவும், பொய் வழக்கு எனவும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும் கூறினர்.

4. அரசு தரப்பில் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 15 சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன எனவும், அசா.1 புகாரில் உள்ள கையெழுத்தை அவருடையதாக ஏற்றுக் கொண்டுள்ளார்

எனவும், அ.சா.7 வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார் எனவும், அசா.8 காவல் துணைக்கண்காணிப்பாளர் வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டு எதிரிகள்மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறியுள்ளார் எனவும், மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் இவ்வழக்கை ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நிருபிக்கக் கூடியவையாக உள்ளது எனவும், ஆதலால் எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் எனவும் அரசு தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நி ரூபிக்கப்படவில்லை எனவும், ஆதலால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி) 324, 506(ii)-ன்கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதும், எதிரிகள் தண்டணைக்குரியவர்களா என்பதுமேயாகும்.

6. இவ்வழக்கில் குற்ற அறிக்கையில் 11 சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் 8 சாட்சிகள் மட்டும் விசாரிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் கூறுபவராக கூறப்பட்ட 1-ஆவது சாட்சி அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறுபவர்களாக கூறப்பட்ட 2, 3 சாட்சிகள் முறையே அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகவும், பார்வை மகசரில் சாட்சிக் கையொப்பம் இட்டது குறித்து கூறுபவர்களாக கூறப்பட்ட 5, 6 சாட்சிகள் முறையே அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 4-ஆவது சாட்சி அ.சா.6 ஆகவும், புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்தது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 8-ஆவது சாட்சி அ.சா.7 ஆகவும், சாட்சிகளை மேல்விசாரணை செய்து காயச்சான்று பெற்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 11-ஆவது சாட்சி அ.சா.8 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். 1-ஆவது சாட்சிக்கு

சிகிச்சை அளித்தது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 7-ஆவது சாட்சி, சாட்சிகளை விசாரித்து எதிரி கைது, மேல்விசாரணை செய்து காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பியது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 9-ஆவது சாட்சி, சாட்சிகளை மறு விசாரணை செய்து வழக்கின் சட்டபிரிவை மாற்றம் செய்தது குறித்து கூறுபவராக கூறப்பட்ட 10-ஆவது சாட்சி ஆகியயோா் விசாரணையிலிருந்து தவிா்க்கப்பட்டுள்ளனா்.

7. புகாா் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், புகாா் வாக்குமூலம் அ.சா.ஆ.3ஆகவும், பாா்வைமகசா் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், சட்டப்பிரிவு மாற்றறிக்கை அ.சா.ஆ.6-ஆகவும், விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.7ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

8. இவ்வழக்கில் அசா.1 முகம்மது தௌபிக் கொடுத்த அசாஆ.3 புகாா் வாக்குமூலத்தில், 10.01.2018-ஆம் தேதி கல்லூாிக்கு செல்லாமல் மதியம் 03.00 மணியளவில், அவரும் அவரது நண்பா்கள் அப்துல் ரஜாக், ாீயாசூதின், நசூருதீன், ஜபிக்முகமது, நூாருல்உசேன் மற்றும் நிஜாமுதீன் ஆகியோா் அவா்களது ஊா் மெயின் ரோட்டிலுள்ள ாியாலாத் கிளப்பிற்கு வந்து கேரம் போா்டு விளையாடிக் கொண்டிருந்ததாகவும், மாலை 05.30 மணியளவில் கீழே சத்தம் கேட்டு மாடியில் உள்ள கிளப்பிலிருந்து கீழே வந்து சிங்கப்பூரான் டிராவல்ஸில் நின்று பாா்த்தபோது, பரக்கத் பாஸ்ட்புட் கடையில் ஏதோ தகராறு நடந்தது எனவும், ஆதங்குடியைச் சோ்ந்த பாஸ்கா் என்பவாின் மகன் பாண்டியராஜன், மணியரசன் மகள் அஜய்குமாா் மற்றும் 5 நபா்கள் இரும்பு கம்பியால் சலீம் பாட்ஷாவை தாக்க முற்பட அவா் ஓடிப்போய் தடுத்தபோது, 'என்னடா தேவுடியா பயல, குச்சிக்காாி பயல' என்று திட்டி பாண்டியராஜனும், அஜய்குமாரும் இரும்பு கம்பியால் தாக்கியதில், அவரது இடது பக்க முன்னந்தலை, இடது தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது எனவும், உடன் இருந்தவா்கள் மத்தியஸ்தம் செய்தாா்கள் எனவும், மேற்படி நபா்கள் அவரைப் பாா்த்து 'கொல்லாமல் விடமாட்டோம்' என்று மிரட்டி விட்டு ஓடிவிட்டதாகவும், காயம்பட்ட அவரை 108 ஆம்புலன்ஸ்

மூலம் அப்துல்ரசாக் என்பவர் கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போனபோது அங்கு சிகிச்சையளித்து மேல்சிகிக்சைக்காக திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், அங்கு மேல்சிகிச்சை பெற்றதாகவும், எனவே எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

9. அ.சா.1 முகமது தௌபிக் அவரது சாட்சியத்தில், 10.1.2018ம் தேதி பொதக்குடியில் உள்ள ஸ்போர்ட்ஸ் கிளப்பில் அவர் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தபோது, கீழே உள்ள பாஸ்ட் புட் கடையில் ஒரே சத்தமாக கேட்டதால், அவர் போய் பார்த்தபோது, சுமார் 20, 25 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அங்கு போய் அவர் சண்டையை தடுத்த போது அவரையும் அங்கிருந்த யாரோ அடித்துவிட்டதாகவும், எதிரி அவரை அடிக்கவில்லை எனவும், அதன்பிறகு அவரை கூத்தாநல்லூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றதாகவும், திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கூத்தாநல்லூர் போலிசார் அவரிடம் எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டதாகவும் கூறியுள்ளார். அ.சா.2 அப்துல்ராஜாக் அவரது சாட்சியத்தில், 10.1.2018-ஆம் தேதி மாலை 5.30 மணி சுமாருக்கு அவர், தௌபிக், ரியாசுதீன் ஆகியோர் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தபோது, சலிம் பாச்சா பாஸ்ட்புட் கடையில் சத்தம் கேட்டு, அவர்கள் ஓடிபோய் பார்ததபோது, கூட்டத்தில் இருந்தவர்கள் அசா.1 ஐ தலையில் அடித்துவிட்டார்கள் எனவும், அவரை யார் அடித்தது என்று கூட்டத்தில் அடையாளம் காண முடியவில்லை எனவும், அவர் காயம்பட்ட தௌபிக்கை கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும், போலிசார் அவரை விசாரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

10. அ.சா.3 ரியாசுதீன் அவரது சாட்சியத்தில், 10.1.2018 ம் தேதி மாலை 5.30 மணி சுமாருக்கு நான், தௌபிக், ரசாக் ஆகியோர் கேரம் போர்டு விளையாடிக்கொண்டிருந்தபோது, பரக்கத் பாஸ்ட்புட் கடையில் சத்தம் கேட்டு அவர்கள் ஓடிபோய் பார்த்தபோது கூட்டத்தில் இருந்தவர்கள் அசா 1ஐ தலையில் கட்டையால் அடித்துவிட்டார்கள் எனவும், அவரை யார் அடித்தது என்று கூட்டத்தில் அடையாளம் காண முடியவில்லை எனவும், அவரும், ரசாக்கும் காயம்பட்ட தௌபிக்கை கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாகவும், போலிசார் அவரை விசாரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார். அ.சா.6 ராமு வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

சமயத்தில், அவர் பூ வாங்குவதற்காக திருவாரூருக்கு சென்று விட்டதால், எந்த சம்பவத்தையும் அவர் நேரடியாக பார்க்கவில்லை எனவும், போலிசார் அவரை விசாரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோர் அரசுக்கு அதரவாகவும், எதிரிக்கு எதிராகவும் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பதால், அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளபோதிலும், எதிரிக்கு எதிரான சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை.

11. அ.சா.4 ஜாகிர் உசேன் அவரது சாட்சியத்தில், வழக்கு நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அவருடைய வீட்டில் கொத்தனார் வேலை நடந்துகொண்டிருந்ததால், அவர் வீட்டை விட்டு வெளியில் வரவில்லை எனவும், வழக்கு சம்மந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது எனவும், அவரிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள கையெழுத்து அவருடையது அல்ல எனவும், போலிஸ் அவரை விசாரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார். அ.சா.5 ஷேக் அலாவுதின் அவரது சாட்சியத்தில், வழக்கு நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அவர் வெளியூருக்கு சென்று விட்டதால், வழக்கு சம்மந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது எனவும், அவரிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள கையெழுத்து அவருடையது அல்ல எனவும், போலிஸ் அவரை விசாரிக்கவில்லை எனவும் கூறியுள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.5 பார்வைமகசரில் உள்ள கையெழுத்துக்களை அவர்களுடையது இல்லை என மறுத்துவிட்டதால், அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளபோதிலும், எதிரிக்கு எதிரான சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை.

12. அ.சா.8 வெங்கடாசலம் அவரது சாட்சியத்தில், 10.1.2018ம் தேதி கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற வான் செய்தி தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த தௌபிக் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அவரிடம் படித்து காண்பித்து அவருடைய கையெழுத்து பெற்று பின்பு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 8/2018 சபி 147, 148, 294(பி), 324, 506(2) இதசன் கீழ் அவர் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை இணைத்து மண்ணார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2க்கு அனுப்பியிம் ஒரு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு சமர்ப்பித்தும்,

மற்ற நகல் களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், இது சம்மந்தமாக டிஎஸ்பி அவரை விசாரித்ததாகவும் கூறியுள்ளார்.

13. அ.சா.9 காவல் துணை கண்காணிப்பாளர் நடராஜன் அவரது சாட்சியத்தில், 13.1.2018 ம் தேதி அவர் திருவாரூர் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளராக பணியிலிருந்த போது, கூத்தாநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 8/2018 சபி 147, 148, 294(பி), 324, 506(2) இதச பிரிவுகளின் கீழ் உதவி ஆய்வாளர் வெங்கடாச்சலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன் பார்வையிட்டு , இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு 11.1.2018ம் தேதி காலை 6 மணிக்கு சென்று சாட்கிள் முகமது ஜாகிர் உசேன், மற்றும் ஷேக் அலாவுதின் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயர் செய்து சாட்சிகளின் கையெழுத்து பெற்று, இவ்வழக்கின் புகார்தாரர் முகமது தௌபிக், சாட்சிகள் அப்துல் ரஜாக், ரியாசுதின், ராமு, முகமது ஜாகிர் உசேன், ஷேக் அலாவுதின் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் எதிரி பாண்டியராஜனை பொதக்குடி லெட்சுமாங்குடி வெண்ணாத்து பாலம் அருகில் வைத்து கைது செயது, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி, இவ்வழக்கானது எதிரிடை வழக்காக இருப்பதால் விசாரணை செய்யும் அதிகாரம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு மட்டுமே உள்ளதால், இவ்வழக்கு கோப்பினை காவல் துணை கண்காண்ப்பாளராக பணியிலிருந்த சுகுமார் என்பவருக்கு அனுப்பி வைக்க, அவர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, குற்ற எண் 9/2018 உடன் சேர்த்து, இதனையும் புலன் விசாரணை செய்தபோது, ஏற்கெனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சொன்ன அதே விபரத்தை அவரிடமும் விசாரணையின் போது சொன்னதால், தனியாக மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யாமல், மேற்படி சட்டபிரிவுகளை 294(பி), 324, 506(2) ஆக அ.சா.ஆ.6 சட்டபிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த நிலையில் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால், அதற்கு பின் காவல் துணை கண்காணிபாளர் பணியில் சேர்ந்த அ.சா.8 காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்புவிக்கப்பட்ட வழக்கு கோப்பினை அவர் பெற்று சாட்சிகளை விசாரித்து, இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கபில் ராஜ் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் காயசான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் வெங்கடாசலம் முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்னன் ஆகியோரை

தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் எதிரி பாண்டியராஜன் மட்டும் சம்மந்தப்பட்டுள்ளார் எனவும், புகாரில் கண்ட மற்ற எதிரிகள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை எனவும், அவரது விசாரணையில் தெரியவந்ததால், மற்று எதிரிகளை நீக்கம்செய்து பாண்டியராஜன் மீது மட்டும் மேற்படி சட்டபிரிவு மாற்று அறிக்கை பிரிவுகளின் கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

14. இவ்வழக்கின்கண் சம்பவ சாட்சிகள், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் அரசுக்கு ஆதரவாகவும், எதிரிக்கு எதிராகவும் எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் காவல்துறையினர் சாட்சியங்களை மட்டும் கொண்டு எதிரிக்கு எதிரான குற்றங்களை உறுதிபடுத்துதல் இயலாததாகும். ஆதலால் எதிரிக்கு எதிராக இவ்வழக்கின்கண் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஐயப்பாட்டிற்கிடமின்றி திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை எனவும், எதிரிக்கு ஐயப்பாட்டின் பலனாக விடுதலையை வழங்குவது ஏற்புடையது எனவும் தீர்மானிக்க வேண்டியதாக உள்ளது.

**இறுதியாக, இ.த.ச பிரிவுகள் 294(பி), 324( 2 எண்ணிக்கை), 506(ii)-ன்கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் ஐயப்பாட்டின் பலன்களை எதிரிக்கு வழங்கி குவிமுச. பிரிவு 235(1) பிரிவின்படி விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிற்கான வழக்கு பொருள் எதுவும் இல்லை. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார். மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாதிருப்பின் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ள பிணை முறியை இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று

2019-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,(கு.உ.பா.)**
**தஞ்சாவூர்.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | : | முகம்மது தௌபிக் |
| அ.சா.2 | : | அப்துல் ரசாக் |
| அ.சா.3 | : | ரியாசுதீன் |
| அ.சா.4 | : | ஜாகிர் உசேன் |
| அ.சா.5 | : | ராமு |
| அ.சா.6 | : | வெங்கடாச்சலம் - உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | : | நடராஜன் - காவல் துணை கண்காணிப்பாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | : | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | : | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | : | சட்டபிரிவு மாற்று அறிக்கை |
| அ.சா.ஆ.7 | : | விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள் :-** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள்:** இல்லை.

**எதிரிகள் தரப்பு சான்றாவணம்:** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள்கள்:** இல்லை.

**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,(கு.உ.பா.)**
**தஞ்சாவூர்.**

வரைவு/ சீரான தீர்ப்புரை
சி.சி.எண்.01/2019
நாள் 30.09.2019

| | |
|---|---|
| | **<u>தீர்ப்பு  நாள் 30.09.2019</u>**<br><br>**<u>பட்டியல் வழக்கு எண்.01/2019</u>**<br><br>**எதிரி முன்னிலை. குவிமுச 313(1)(ஆ) பிரிவின்கீழ் வினவ எதிரி அதனை பொய் சாட்சியம் எனவும், பொய் வழக்கு எனவும், அவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும் கூறினார். வாதுரை கேட்கப்பட்டது. தீர்ப்பு பகரப்பட்டது.  இறுதியாக, இ.த.ச பிரிவுகள் 294(பி),  324(2 எண்ணிக்கை), 506(ii)-ன்கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் ஐயப்பாட்டின் பலன்களை எதிரிக்கு வழங்கி குவிமுச. பிரிவு 235(1) பிரிவின்படி விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிற்கான வழக்கு பொருள் எதுவும் இல்லை.  விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார். மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாதிருப்பின் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ள பிணை முறியை இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.**<br><br>**முதலாவது கூடுதல் மாவட்ட<br>அமர்வு நீதிபதி, (கு.உ.பா.)  தஞ்சாவூர்.** |